

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின்னர் புதுதில்லி செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு நேற்று (8.8.2023) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கீழடி வரலாறு மற்றும் அகழ்வாய்வு குறித்து ஒடியா மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட காலப்பேழை (Coffee Table) புத்தகத்தை வழங்கி வழியனுப்பி வைத்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (8.8.2023) முகாம் அலுவலகத்தில், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர் த.க. தமிழ்பாரதன் சந்தித்து, இத்தாலியின் வெனீசு நகரத்தில் நடைபெற்ற கிரேக்க மொழிக் கருத்தரங்கிற்கு சென்றபோது, அதன் அருகிலுள்ள சான் லாசரோ தீவில் தமிழ் ஓலைச்சுவடிகள் இருப்பதைக் கண்டறிந்து, அதுகுறித்த அறிக்கையை வழங்கினார். இச்சந்திப்பின்போது, அண்மையில் அவரது தமிழாக்கத்தில் வெளியான அரிஸ்டாட்டிலின் இயற்பியல் நூலையும் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (08.08.2023) சென்னை முகாம் அலுவலகத்தில், ஜெர்மனியில் ஜூலை 28 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 6ஆம் தேதி வரை நடைபெற்ற உயரம் குறைந்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்ற 7 வீரர், வீராங்கனைகள் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் சங்க செயலாளர் கிருபாகர ராஜா, பொருளாளர் விஜய் சாரதி, துணைச் செயலாளர் செந்தில் குமார் ஆகியோர் உள்ளனர்.

### ஓராண்டில் வியக்க வைக்கும் சாதனை!

# மாணவர்களின் வாழ்க்கையை மாற்றிய மகத்தான திட்டம் ‘நான் முதல்வன் திட்டம்’ !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக.9-

ஓராண்டில் வியக்க வைக்கும் சாதனையைப் புரிந்த மாணவர்களின் வாழ்க்கையை மாற்றிய திட்டம் தான் ‘நான் முதல்வன் திட்டம்’ என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

நம்முடைய திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான ‘நான் முதல்வன் திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழா, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில், இன்று மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு - கலைஞருடைய நினைவு நாளான இன்று நிகழ்ச்சியை நடத்துவது, இந்த நிகழ்ச்சிக்குக் கூடுதல் சிறப்பைத் தருகிறது.

இந்த ஓராண்டில் ‘நான் முதல்வன் திட்டம்’ இலட்சக்கணக்கான மாணவர்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது.

கடந்த ஜூலை மாதம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், நான் முதல்வன் தொடர்பான ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில், பங்கேற்கும் வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். இந்த நான் முதல்வன் திட்டத்தின் மூலம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அந்த நிகழ்ச்சியில் என்னோடு கலந்துரையாடினார்கள்.

### வியக்க வைக்கும் சாதனைத் திட்டம்!

நான் முதல்வன் திட்டம் செய்திருக்கின்ற சாதனைகள், எங்களையெல்லாம் வியக்க வைக்கிறது. அங்கு ஆரோக்கியா ரிபெக்கா என்ற ஒரு மாணவி என்னுடன் பேசினார். கள்ளக்குறிச்சி அரசுக் கலை அறிவியல் கலைக்கல்லூரியில் அவர் பி.காம் இறுதி யாண்டு படித்து வருகிறார். ரிபெக்கா 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி கற்றவர்.

அன்றைய நிகழ்ச்சியில் அவ்வளவு அருமையாக, கிட்டத்தட்ட நான்கு நிமிடம் அவ்வளவு சரளமாக, தன்னம்பிக்கையோடு ஆங்கிலத்திலேயே என்னோடு உரையாற்றினார். நான் முதல்வன் திட்டத்தில் வழங்கப்படும் Language and Communication Skills Training தான் ரிபெக்காவை அப்படிப் பேசவைத்தது.



இன்றைக்குச் சகோதரி ரிபெக்கா ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலைக்கும் தேர்வாகியுள்ளார். அதேபோல், கள்ளக்குறிச்சி அரசுக் கலை அறிவியல் கல்லூரியில் பி.எஸ்சி. கணிதம் படிக்கும் மாணவர் யுகேந்திர பிரசாத் பேசும்போது, அவருடைய பெற்றோர் கூலித் தொழிலாளர்கள் என்றும் சொன்னார்.

### முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் மாணவர்கள்!

பட்டப்படிப்பு என்பதே அவர்களுக்கு ஒரு மிகப்பெரிய கனவாக இருந்ததாகக் கூறினார். கல்லூரி படிக்கும்போது, நான் முதல்வன் திட்டத்தில் Tally மற்றும் MS Excell பயிற்சி பெற்றிருக்கிறார். அதன் மூலம் கல்லூரி முடித்து மாலை ஒரு டிபார்ட்மென்ட் ஸ்டோரில் வேலை செய்கிறார். தன்னுடைய முதல் மாத சம்பளத்தில் அவருடைய அம்மாவிற்கு ஒரு கைகடிகாரம் வாங்கிக் கொடுத்தேன் என்று பெருமையாக என்னிடம் சொன்னார். இதனை அவர் உணர்வுப் பூர்வமாகச் சொன்னபோது எங்களுக்கெல்லாம் அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. அவர்கள் அத்தனைப்பேரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

### 1,000 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கியுள்ளோம்!

இப்படி தமிழ்நாடு முழுவதும், இலட்சக்கணக்கான ரிபெக்கா மற்றும் யுகேந்திர பிரசாத் வாழ்க்கையை மாற்றியதுதான் நான் முதல்வன் திட்டம். சென்னை பல்கலைக்கழகத்தில் கடந்த ஜூன் மாதம் 10-ஆம் தேதி, நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெற்ற கிட்டத்தட்ட 1,000 மாணவ, மாணவிகளுக்குப் பணி நியமன ஆணைகளை நாங்கள் வழங்கினோம். ஆண்டுக்கு 6 இலட்சம் ரூபாய் முதல் 20 இலட்சம் ரூபாய் ஊதியம் வரையிலான பணிகளுக்கான நியமன ஆணைகளை அன்று நாங்கள் வழங்கியுள்ளோம்.

சென்ற மாதம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நூறு வேலைவாய்ப்பு முகாம்களைத் தொடங்கி வைத்துள்ளோம்.

### பல ஆண்டு சாதனைகளை ஓராண்டில் கண்டிருக்கிறோம்!

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நான் முதல்வன் போட்டித்தேர்வு பயிற்சியையும் தொடங்கி வைத்தோம். ஓராண்டிலேயே, பல ஆண்டுகள் செய்ய வேண்டிய சாதனைகளை நான் முதல்வன் திட்டம் செய்து காட்டியுள்ளது.

பொறியியல், கலை அறிவியல் கல்லூரிகளில் மட்டுமே செயல்பட்டு வந்த நான் முதல்வன் திட்டம், தற்போது பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள், பள்ளிகளிலும் தொடங்கப்பட்டுள்ளன. நான் முதல்வன் போட்டித்தேர்வுப் பிரிவின் கீழ் இரயில்வே தேர்வு, வங்கித் தேர்வு, மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் என ஒன்றிய அரசுப் பணித்தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குக் கட்டணமின்றிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### மதிப்பீட்டுத் தேர்வில் வெற்றி பெற்றால் ரூ.7,500 ஊக்கத்தொகை!

ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள், தமிழ்நாடு அரசு நடத்துகின்ற மதிப்பீட்டுத் தேர்வில் பங்கேற்று வெற்றி பெற்றால், அவர்களில் ஆயிரம் பேருக்கு தலா 7,500 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டு மாணவர்கள் வெறும் மாதச் சம்பளதாரர்களாக மட்டுமில்லாமல் தொழில் முனைவோர்களாக மாறி, மற்றவர்களுக்கும் பணிவாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்ற திட்டமாகவும் இந்த நான் முதல்வன் திட்டம் செயல்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நம்முடைய மாணவ, மாணவிகள், இளைஞர்கள், இளம்பெண்கள் சிறந்த முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நல்லதொரு வாய்ப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

